கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26.08.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுகன்று – தொழில்நுட்ப பயிற்சி - பள்ளி மாணவர்களிடையே வரவேற்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள அடிப்படை மற்றும் சமூக அறிவியல் துறையின் மூலமாக சிறுகன்று – தொழில்நுட்ப பயிற்சி 23.08.2023 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ரா.ஜான்சி ராணி அவர்கள் வரவேற்புரையாற்றி தற்போது தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். முனைவர் க.த.பார்த்தீபன் பேராசியர் (வனவியல்) அவர்கள் தரமான விதைத் தேர்வு, நடவு முறைகள், மரக்கன்று பராமரிப்பு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் எஸ்.வரதராஜ் பேராசிரியர் மற்றும் தலைவர் (அடிப்படை மற்றும் சமூக அறிவியல் துறை) வணிக ரீதியாக மரக்கன்று விற்பனை செய்வது பற்றி கூறினார். முனைவர் ஐ.சேகர், பேராசிரியர் (வனவியல்) அவர்கள் சான்றிதழ் மற்றும் நாற்றங்கால் உரிமம் பெறுவது பற்றி விளக்கிக் கூறினார். முனைவர் மீ.திலக், இணைப் பேராசிரியர் (நுண்ணியல் துறை) அவர்கள் செறிவூட்டப்பட்ட மண்புழு உரம் மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு பற்றி செயல் விளக்கம் மூலம் செய்து காட்டினார். முனைவர் பெ.குமார், உதவிப் பேராசிரியர் (வனவியல்) அவர்கள் சிறுகன்று தேர்வு செய்தல,நாற்று உற்பத்தி மற்றும் நாற்றங்கால் பராமரிப்பு முறைகளைப் பற்றி செயல் விளக்கம் மூலமாக செய்து காட்டினார். இதில் 20 பள்ளி மாணவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர். இதில் பள்ளி மாணவர்கள் சிறுகன்று நாற்றுகள் தயாரிப்பு பற்றி ஆர்வத்துடன் செய்து காட்டினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**